WEB COPY



BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

DATED : 20.12.2023

CORAM

**THE HONOURABLE MR.JUSTICE G.R.SWAMINATHAN**

W.P(MD)No.24702 of 2023
and
W.M.P.(MD)Nos.20878 & 20880 of 2023

V.Vaikundamani ... Petitioner

**Vs.**

1.The District Collector,
Nagercoil,
Kanyakumari District.

2.The Superintendent of Police,
Nagercoil,
Kanyakumari District.

3.The Revenue Divisional Officer,
Nagercoil,
Kanyakumari District.

4.P.Paisen ... Respondents

**Prayer** : Writ Petition filed under Article 226 of the Constitution of India, praying this Court to issue a Writ of Certiorari, to call for the records relating to the impugned communication issued by the 1st respondent in proceedings C3/1141762/2023 dated 04.08.2023 quash the same.

For Petitioner : Mr.H.Velavadhas

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



For Respondents : Mr.M.Prakash
Additional Government Pleader for R1 & R3

: Mr.A.Albert James
Government Advocate for R2

: Mr.D.V.Raju for R4

## ORDER

Heard both sides.

2. The petitioner challenges the impugned communication issued by the District Collector, Kanyakumari calling upon the Commissioner, Nagercoil Corporation to take appropriate steps for repairing the petition mentioned pryaer hall.

3. The learned counsel for the petitioner reiterated all the contentions set out in the affidavit filed in support of the writ petition.

4. When the matter was taken up for hearing, the learned Additional Government Pleader produced the copy of the communication from the RDO, Nagercoil in which it has been stated that the prayer hall in question was being run without getting any prior approval and since law and order issue has arisen, the question of recommending the proposal does not arise at all. The said communication dated 27.09.2023 reads as follows:-

WEB COPY

அனுப்புநர்
திரு.க.சேதுராமலிங்கம்,
வருவாய் கோட்டாட்சியர்,
நாகர்கோவில்.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
கன்னியாகுமரி மாவட்டம்
(இ) நாகர்கோவில்.

ந.க.எண்.அ3/4591/2023, நாள் 27-09-2023

ஐயா,

பொருள்: சட்டமும் ஒழுங்கும் - நாகர்கோவில் வருவாய் கோட்டம் - அகஸ்தீஸ்வரம் வட்டம் - வடசேரி மேற்கு கிராமம் - திரு.டைசோன் த/பெ.பாலையா என்பவர் அனுமதியின்றி Prayer Hall கட்டுவதாக வரப்பெற்ற புகார் மனு - அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை:
1. திரு.V.வைகுண்டமணி, தலைவர், அருள்மிகு ஸ்ரீ முத்தாரம்மன் திருக்கோவில், கிருஷ்ணன்கோவில், என்பவரது மனு நாள்:14-09-2023.
2. வட்டாட்சியர் அகஸ்தீஸ்வரம், கடிதம் எண். சி2/5900/2023, நாள்: 22-09-2023 மற்றும் 26-09-2023.

---------

நாகர்கோவில் வருவாய் கோட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி மேற்கு கிராமம், வாத்தியார்விளை என்ற முகவரியை சார்ந்த திரு.டைசோன் த/பெ.பாலையா என்பவர் அனுமதியின்றி தனது வீட்டில் கிறிஸ்தவ மதப்பிரச்சாரம் செய்வதாகவும், அனுமதி பெறாமல் Prayer Hall கட்டுவதாகவும் வரப்பெற்ற பார்வை 1-இல் காணும் மனு தொடர்பாக பின்வரும் விபரங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவில் வருவாய் கோட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி மேற்கு கிராமம், வாத்தியார்விளை, கிரவுன் தெரு, கதவு எண் 105C2 என்ற முகவரியை சார்ந்த திரு.டைசோன் த/பெ.பாலையா என்பவரின் வீட்டின் முன்பகுதியில் அனுமதி இல்லாமல் கிறிஸ்தவ மத பிரச்சாரம் செய்யும் பிரசாரக்கூடம் கட்டுவது தொடர்பாக 25.09.2023 அன்று ஊர் பொதுமக்கள் மற்றும் இந்து அமைப்பினர் வடசேரி காவல்நிலையத்தில் முற்றுகை போராட்டம் செய்தனர் என்பதும், பின்னர் 26.09.2023 அன்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் மற்றும் இந்து அமைப்பினர் சார்பில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு வரும் சர்ச் தொடர்பாக முற்றுகை போராட்டம் நடத்த முயற்சி செய்தனர் என்பதும் தெரியவந்தது.

இந்நேர்வில் பிரஸ்தாப புலமானது அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியருடன் இணைந்து பார்வையிடப்பட்டது. மேற்படி முகவரியில் திரு.டைசோன் த/பெ.பாலையா என்பவருக்கு சொந்தமான மாடி வீடு (தரைதளம் மற்றும் முதல்தளம்) உள்ளது. இந்த வீட்டின் அருகில் உள்ள பிரத்யேக Hall ஒன்றில் பெந்தேகொஸ்தே சபை வழிபாடு வாரத்தில் வியாழன், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடத்தப்பட்டு வருவதாக உள்ளூர் விசாரணையில்

WEB COPY



தெரிகிறது. மேலும் திருலைபசோன் என்பவர் முறையாக அனுமதி பெறாமல் வழிபாட்டுக்கூடம் கட்ட முற்படுவதாக தெரிகிறது. மேற்படி இடத்தில் இதற்கு முன்னர் மேற்படி இடத்தில் ஷீட்டினால் ஆன கூரை அமைத்து ஜெபக்கூட்டம் நடத்தியதாகவும், பின்னர் கூரையை அகற்றி விட்டு காங்கிரீட் மேற்கூரை அமைக்க முன்னர் முயற்சி மேற்கொண்டு பில்லர்கள் அமைத்துள்ளார் என்பதும், பின்னர் மேற்படி ஊர் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்த உடன் கட்டுமான பணியை நிறுத்தி உள்ளார் என்பதும் விசாரணையில் தெரிகிறது. மேற்படி இடத்தில் தரை விரிப்பு, மேசை நாற்காலிகள் அமைக்கப்பட்டு கிறிஸ்தவ ஸ்லோகங்கள் எழுதப்பட்டு ஜெபம் நடைபெறும் இடமாக உள்ளது. திருலைபசோன் மேற்படி கட்டுமானம் பணி செய்யும் இடம் சிறிய சந்து பகுதியாக உள்ளது. இந்த இடத்திற்கு சற்று கிழக்கே எதிர்புறம் சுமார் 10 மீ தொலைவில் வாதை அம்மன் கோவிலும், பின்புறம் சுமார் 100 மீ தொலைவில் காலசாமி கோவில் ஒன்றும் உள்ளது. மேலும் பாத்தியார்விளை ஊரில் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோவில் மற்றும் ஸ்ரீமன் நாராயணசுவாமி கோவில் உள்பட பல கோவில்கள் அமைந்துள்ளது.

மேற்படி திருலைபசோன் ஜெபகூடத்தின் மேற்கூரையை அகற்றி விட்டு காங்கிரீட் Building கட்ட முயற்சி செய்யும் போதெல்லாம் அக்கம் பக்கம் பொதுமக்கள் மற்றும் இந்து அமைப்பினரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் சூழல் அடிக்கடி நடைபெற்று வருகிறது. மேற்படி நடைபெறும் ஜெபக்கூட்டத்தில் தற்போது ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் ஜெபக்கூட்டம் நடைபெறும் போது அதிக அளவு சப்தம் ஏற்பட்டு கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு படிக்க இயலாத நிலை உள்ளது என்பது அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்களிடம் விசாரணை செய்ததில் அறியமுடிகிறது. மேற்படி இடத்தில் திருலைபசோன் அவர்களால் கட்ட முற்படும் கட்டுமானம் முழுக்க முழுக்க ஜெப கூட கட்டுமானம் தான் என்பது ஸ்தல ஆய்வில் தெரிகிறது. மேலும் மேற்படி திருலைபசோன் என்பவரது வீடு அதற்கு அருகே தனியாக உள்ளது. மேற்படி ஜெபக்கூடம் சுமார் 32 அடி அகலம் 55 அடி நீளம் கொண்ட பெரிய ஹால் ஆகும். இந்த ஜெபக்கூடம் கட்டுமானம் செய்வதால் அக்கம் பக்கம் பொதுமக்கள் மற்றும் பல்வேறு இந்து அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து சட்டம் ஒழுங்கு பிரச்சனை உருவாகும் சூழல் ஏற்பட்டு உள்ளது. எனவே திருலைபசோன் மேற்படி இடத்தில் மேற்கொண்டு எவ்வித கட்டுமானங்களும் செய்யக்கூடாது என பணிகள் தடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் நாளது தேதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாவண்ணம் காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் அவருக்கு உரிமைப்பட்ட கட்டிடத்தில் மத வழிபாட்டுத்தலம் செயல்பட அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறை ஆணைகள் எண்.அ3/4730/2020-நாள்:02-01-2021-யினை (இவ்வலுவலக கடிதம் எண்.அ3/4730/2020, நாள்:02-01-2021-இன் படி திருலைபசோன் என்பவருக்கு கட்டிடம் கட்டும் பணி மற்றும் ஜெபக்கூட்டம் நடத்துவது ஆகியவற்றை நிறுத்த வேண்டும் என்றும், மேற்படி இடத்தில் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதால் அனுமதி பெற்ற பின்னர் கட்டிடம் கட்டவும், ஜெபக்கூட்டம் நடத்தவும் அனுப்பப்பட்ட கடிதம்

WEB COPY



ஆகும்) இரத்து செய்யக் கேட்டு திரு.பைசோன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண் WP(MD)No.886/2021-ஆனது 21-01-2021-ஆம் நாளிட்ட தீர்ப்பின் படி மனுதாரரின் கோரிக்கை நிராகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி திரு.பைசோன் என்பவர் 28-07-2023 நாளிட்ட மனுவில் வீட்டின் மேற்கூரை அமைக்க அனுமதி தந்து பாதுகாப்பு அளிக்க கேட்டுள்ளது தொடர்பாக இவ்வலுவலக கடிதம் எண்.அ3/1693/2022, நாள்:02-08-2023-இன் படி நாகர்கோவில் துணை காவல் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்டு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளருக்கு நகலிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளரது கடிதம் எண்.எப்1/10716/2020, நாள்:27-09-2023-இல் திரு.பைசோன் என்பவர் அவரது வீட்டோடு இணைந்த ஜெபக்கூட்டம் நடத்தும் பழைய கட்டடத்தினை இடித்து விட்டு 20.00 மீ X 10.50 மீ என்ற அளவில் அதே இடத்தில் புதிய ஜெபக்கூட்டம் கட்டடம் கட்டி வருகிறார் என்றும், மேற்கண்ட வழிபாட்டுத்தலங்கள் அனுமதி தொடர்பாக தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019, பிரிவு 19, இணைப்பு XVII(6)-இன் படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தடையில்லா சான்று பெற்று நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமத்தில் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், மேலும் ஜெபக்கூடத்திற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாநகராட்சி அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பதால் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய காரணங்களால் திரு.பைசோன் என்பவர் அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி மேற்கு கிராமம், நகரப் புல எண்.A7/176-இல் (புதிய புல எண்.A17/238) வழிபாட்டுத்தலம் அமைக்க எவ்வித அனுமதியும் இன்றி புதிய கட்டிடம் கட்டுவதற்கு தொடர்ந்து முயற்சிப்பதாலும், ஜெபக்கூட்டம் நடத்தி வருவதாலும் மேற்படி பகுதியிலுள்ள மக்களால் எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டு வருகிறது. எனவே எவ்வித அனுமதியும் பெறாத மனுதாரருக்கு வழிபாட்டுத்தலம் அமைக்க அனுமதி வழங்க பரிந்துரைக்க இயலவில்லை என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்பு:-மேற்குறிப்பிட்டவாறு.

WEB COPY



**G.R.SWAMINATHAN, J.**

rmi

5. Since this subsequent communication addressed the petitioner's concerns, the Writ Petition is disposed of by recording the stand of the official respondents. No costs. Consequently, connected miscellaneous petitions are closed.

**20.12.2023**

Index : Yes / No
Internet : Yes/ No
rmi

To

1.The District Collector,
Nagercoil,
Kanyakumari District.

2.The Superintendent of Police,
Nagercoil,
Kanyakumari District.

3.The Revenue Divisional Officer,
Nagercoil,
Kanyakumari District.

W.P(MD)No.24702 of 2023

20.12.2023